**சமுர்த்தி நிதியம் - 2021**
**----------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுர்த்தி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையான மற்றும் நியாயமான விதத்தில் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் நிதியத்தைக் கணக்கொழிப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றீடு இல்லாவிடின் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குறித்த விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு அவ்வாளுகைக்குட்பட்ட தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலநேரத்திலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க

கூடிய வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் அவசியமாகும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் தாக்கமளிப்பதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்து கொண்ட போதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் சரியான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயபூர்வத் தன்மையை மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளனவா என்பதும் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணப்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் ஆளுநர் சபையால் வழங்கப்பட்ட ஏதாவதொரு எழுத்துமூலச் சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வது அவசியமாகவுள்ளது. பொதுப்பேரேடு, நாளேடு, நாளேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணிச்செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | புதிய அவதானிப்பா/ நிலவுகின்ற அவதானிப்பா | கட்டுப்பாட்டு அச்சுறுத்தல் வெளிப்படுத்துகை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2014 ஆம் வருடத்தில் தேசத்தின் மகுடம் நிகழ்ச்சித்திட்டத்துடன் | நிலவுகின்ற | பேணப்படும் முறைமைக்கு இணங்க | ஏற்றுக் கொள்கின்றேன். | அறவிடுதல் நிச்சயமற்றதாக இருப்பதால் |

| | | |
|---|---|---|
| சம்பந்தப்பட்ட 03 மாவட்டங்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாவட்டச் செயலகங்களுக்கு பொதுத் திறைசேரியினால் மீள் நிரப்புதல் அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபா 212,000,000 ஆன கடன் தொகையொன்று திறைசேரியின் அங்கீகாரமின்றி நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் திறைசேரியின் எழுத்து மூலமான அங்கீகாரமொன்று வழங்கப்பட்டிராமையால் இத்தொகை மீள் நிரப்பப்படுவதற்கான இயலுமையொன்று இல்லையென்பதாக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களப் பணிப்பாளரினால் 2018 சனவரி 02 ஆந் திகதி அனுப்பப்பட்டிருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | நிதிக்கூற்றுக் களில் ஏற்பாடொன்று செய்யப்படல் வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | புதிய அவதானிப்பா/ நிலவுகின்ற அவதானிப்பா | கட்டுப்பாட்டு அச்சுறுத்தல் வெளிப்படுத்துகை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிப்பிரமாணம் 876(3) | நிதியத்தை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் திவிநெகும (சமுர்த்தி) அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் இந்நிதியம் தொடர்ந்தும் பேணப்பட்டு | நிலவுகின்ற | பேணப்படும் முறைமைக்கு இணங்க வேண்டும். | 2013 இன் 01 ஆம் இலக்கத் திவிநெகும அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2014.01.03 ம் திகதியிலிருந்து திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்ட தினத்தன்று சில இலக்குகள் மற்றும் | சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| வருவதற்குமான தேவைப்பாடு தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | நோக்கங்களை அடைவதற்காக பேணப்படும் நிதியங்கள் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியங்கள் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் கீழும் அதே முறையில் பேணப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த திவிநெகும நிதியம் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ அதே முறையில் பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 103,549,896 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 142,083,722 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 38,533,826 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் முதலீட்டு வட்டி வருமானம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | புதிய அவதானிப்பா/ நிலவுகின்ற அவதானிப்பா | கட்டுப்பாட்டு அச்சுறுத்தல் வெளிப்படுத்துகை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 15,088,150 ஆனது விவசாய, கடற்றொழில் மற்றும் கால்நடைக் கட்டுப்பாடு போன்ற வாழ்வாதார செயற்திட்டங்களுக்காக சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பம் முதல் 2007 வரையில் திறைசேரி | நிலவுகின்ற | பேணப்படும் முறைமைக்கு இணங்க வேண்டும். | அறிக்கை சமர்ப்பிக்கப்படாத போதிலும், 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் பெற வேண்டிய பணத்தில் சிறிய அளவுகள் அவ்வப்போது கடனை தீர்ப்பதற்காக கிடைத்தவாறு | திறைசேரி நிதியேற்பாடுகளின் ஊடாக வழங்கப்பட்டுள்ள செலவிகத் தொகைகளை மீள பெற்றுக் கொள்ளல் தொடர்பில் முறையான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிதியேற்பாட்டினை பயன்படுத்தி சமுர்த்தி அதிகாரசபையினால் மீள அறவீடு செய்யும் அடிப்படையில், நலனாளிகளுக்கு சுழற்சி அடிப்படையில் கடன் வழங்கப்பட்டிருந்தது.இக்கடன் அறவீடானது 2007 யூலை 16 ஆந் திகதிய ச/அதி/10/ஜாச.கம்/சுழற்சி நிதியம் ஆம் இலக்க சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்தின் அறிவுரைப் பிரகாரம் பிரதேச செயலகங்களில் காணப்படும் “கம் புபுது வாழ்வாதார சுழற்சி” கணக்கிற்கு செலவு வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு வரை மேற்படி கணக்கிற்கு செலவு வைத்தல் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டில் இத்தொகையில் ரூபா 260,220 ஆன தொகையொன்று நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | | | காணப்பட்டது. | மற்றும் எழுத்துமூல சான்றுகளை வைத்துக்கொள வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நாடு பூராவும் செயற்படுகின்ற வருமானம் ஈட்டும் செயற்திட்டங்களில் கிடைக்கின்ற தவணை மற்றும் வாடகை வருமானங்களை முதலீடு செய்தல் நிதியத்தின் நோக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2017 யூன் 09 ஆந் திகதிய சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகள் சுற்றறிக்கை 2017/7 ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை பிரகாரம் இந்நிதியத்திற்கு அதுவரையிலும் செலவு வைக்கப்பட்ட கட்டிட வாடகை, சமுர்த்தி நிதியத்திற்கு செலவு | நிலவுகின்ற | பேணப்படும் முறைமைக்கு இணங்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. | நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை மாற்றும்போது அரசியலமைப்புச் சட்டப்படி அதைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வைக்காதிருக்குமாறும் 2017 ஆம் ஆண்டு முதல் சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களினால் அந்த பணத்தை தமது ‘‘வங்கிக் கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியக் கணக்கு ‘‘ இற்கு செலவு வைக்குமாறும், உரிய கணக்குக் குறிப்பு வைக்கப்பட வேண்டிய முறை குறிப்பிடப்பட்டு சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. இந்நிதியம் நிறுவப்பட்ட நோக்கம் மற்றும் மேற்படி தீர்மானம் தொடர்பாக சர்ச்சைக்குரிய நிலைமையொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | புதிய அவதானிப்பா/ நிலவுகின்ற அவதானிப்பா | கட்டுப்பாட்டு அச்சுறுத்தல் வெளிப்படுத் துகை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 பெப்ரவரி 02 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிலவுகின்ற | பேணப்படும் முறைமைக்கு இணங்க வேண்டும். | தங்களின் **EHA/S/SDD/Funds /64**மற்றும் 2019 மே 31 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் கணககுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | புதிய அவதானிப்பா/ நிலவுகின்ற அவதானிப்பா | கட்டுப்பாட்டு அச்சுறுத்தல் வெளிப்படுத் துகை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலவுகின்ற | பேணப்படும் முறைமைக்கு இணங்க வேண்டும். | இந்நிதியம் மீளாய்வு செய்யப்பட்டு திறைசேரியினால் நிதியம் சம்பந்தமாக எதிர் காலத்தில் எடுக்கப்படுகின்ற முடிவுகளின் அடிப்படையில் நியதிச்சட்ட நிதியமாக நிறுவப்பட்ட பின்னர் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பாதீடு தயாரிக்கப் பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |